10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 132 சனிக்கிழமை செப்ரெம்பர் 30 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

# 65
## பொலிஸாருக்கு ஒரே நாளில் இடமாற்றம்

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் அதிகாரி உட்பட 65 பொலிஸார் ஒரே நேரத்தில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் வர்த்தகர் ஒரு 06



# வடக்கில் காலூன்றும் மகிந்தவின் கட்சி

**யாழ். வந்த பசில் தகவல்**

தமது புதிய கட்சியின் நடவடிக்கைகளை வடக்குக்கு விஸ்தரிப்பதற்கான பூர்வாங்கப் பணிகளைத் தொடங்குவதற்காக முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ச, யாழ்ப்பாணத்துக்கு இன்று காலை வந்தார். இதன்போது அவருடன் முன்னாள், இன்னாள் ஈ.பி.டி.பி உறுப்பினர்களே அதிகளவில் இணைந்து, பயண 06

### இடைக்கால அறிக்கைக்கு எதிராக
# நாடு முழுவதும் போராட்டம்



புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் நோக்கில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கைக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்களை நடத்தக் கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது. மாவட்ட மட்டத்தில் எதிர்ப்புக் கூட்டங்களை நடத்த உள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்புச் சட்டம் சம்பந்தமான இடைக்கால அறிக்கை நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. இதற்குப் பல தரப்பினர் மத்தியில் இருந்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அரசாங்கம் முன்வைத்துள்ள புதிய அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான இடைக்கால அறிக்கை இலங்கையின் ஒற்றையாட்சித் தத்துவத்துக்கு எதிரானது எனவும் பிரிவினைக்கு வழியை ஏற்படுத்தும் எனவும் சிங்கள தேசியவாதிகள் குற்றம் சுமத்தி வருகின்றனர். (எ)

### ஹர்த்தால் அழைப்பு
# யாழில் பிசுபிசுப்பு



எந்த ஒரு பொது அமைப்புக்களும் ஆதரவு வழங்காததால் யாழ்ப்பாணத்தில் இன்று அழைப்பு விடுக்கப்பட்டிருந்த ஹர்த்தால் பிசுபிசுத்துப் போயுள்ளது. தீவக மக்களும் பெண்கள் அமைப்புக்களும் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுப்பதாக நேற்று யாழ். நகரப் பகுதியெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

மாணவி வித்யா படுகொலைக் குற்றவாளிகளைத் தப்பிக்க உதவியதாகக்கூறப்படும்அமைச்சர்விஜயகலா மகேஸ்வரன் மற்றும் சட்டத்தரணி தமிழ்மாறன் ஆகியோர் 06


# நிதிக் கொள்கைகளை கடுமையாக்க வலியுறுத்து



நிதிக் கொள்கைகளைக் கடுமையாக்க வேண்டுமென இலங்கையிடம் சர்வதேச நாணய நிதியம் கோரிக்கை விடுத்துள்ளது. ஜாவூ லீ தலைமையிலான சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் செய்திருந்தது. இதன் போது இலங்கையின் நிதிக் கொள்கைகள் தொடர்பில் கவலை வெளியிட்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நிதிக் கொள்கைகளைக் கடுமையாக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பேண்தகு அபிவிருத்தி நகர்வதற்கு இலங்கையின் நிதிக் கொள்கைகள் உரிய முறையில் வகுக்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் பொது நிதி முகாமைத்துவ விவகாரங்களில் கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமெனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையின் முக்கிய அரச நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ)



# மன்னார் ஆயருடன் சம்பந்தன் பேச்சு

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் இன்று மாலை மன்னாருக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இதன்போது அவர் மன்னார் ஆயரைச் சந்திக்க உள்ளார்.

இந்தச் சந்திப்பில் புதிய அரசியலமைப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆயருடன் கலந்துரையாடுவர் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, மன்னாரில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளை அலுவலகம் ஒன்றை அவர் நாளை திறந்து வைக்க உள்ளார். அத்துடன், பொதுமக்கள் சந்திப் பொன்றிலும் அவர் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# அரசின் துரோகத்துக்கு கூட்டமைப்பும் துணைபோகிறது

அரசாங்கம் இழைத்துவரும் துரோகத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துணை போவதாக முன்னாள் அமைச்சரும், லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண குற்றஞ் சாட்டியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியாளர் சந்திப்பின் போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த திஸ்ஸ விதாரண,

“அரசாங்கம் செய்துவருகின்ற துரோகச் செயல்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி ஆகியன துணை போகின்றன. எங்களது பொருளாதாரத்தை வெளிநாடுகள் கையில் எடுப்பதற்கும், சுதந்திரத்தைச் சீர் குலைப்பதற்கும் அவர்கள் துணை போகிறார்கள்.

எதிர்க்கட்சி என்று சொல்லிக் கொண்டிருக்கும் சம்பந்தன் உள்ளிட்ட கூட்டமைப்பு உறுப்பினர்



கள் இதற்குத்துணை போகிறார்கள். இவ்வாறானதொரு எதிர்க்கட்சி வேறொரு நாட்டிலும் இல்லை. நாட்டு மக்களுக்கு இந்த அரசு இன்று வேண்டாம் என்று ஆகிவிட்டது. சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்தபோது சிங்களம், தமிழ் இரண்டும் அரச மொழிகளாக இருக்க வேண்டும் என்று குரல் கொடுத்தது எமது கட்சி.

இலங்கையில் யுத்த மீறல்கள் இடம்பெற்றிருந்தால் எமது நாட்டுக்குள் எமது நீதிமன்றமே நேரடியாகப் பார்த்துக் குற்றமிழைத்தவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும். அதுவே சர்வதேச நீதியாகும். அதனைச் செய்யாமல் ஐ.நா.வில் சென்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு விட்டு வந்திருக்கிறார்கள்.

எம்மை நோக்கிக் குறிப்பாக அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியன கை நீட்ட இடமளித்திருக்கிறது இந்த அரசு. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் துணை போகிறது என்றார். (எ-04)

# யானை தாக்கி ஒருவர் பலி!



திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேருநுவர காட்டுப் பகுதிக்கு விறகு எடுப்பதற்காகச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் யானைத் தாக்குதலுக்கு உள்ளாகிச் சம்பவ இடத்தில் உயிர் இழந்தார். அவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாகச் சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தோப்பூர் செல்வநகர் 09 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பிச்சைத்தம்பி முஹம்மது அனீபா (வயது-60) என்பவராவார். குறித்த நபர் வியாழக்கிழமை காலை சேருநுவர காட்டுப் பகுதிக்கு விறகு எடுக்கச் செல்வதாக மனைவியிடம் கூறிவிட்டு சென்று மாலையாகியும் வீடு சேராமையினால் அவரது குடும்பத்தினர் சேருநுவர பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அதனையடுத்து ஊரவர்வர்களுடன் இணைந்து குறித்த காட்டுப் பகுதியில் தேடுதல் நடத்தியும் சடலம் மீட்கப்படவில்லை. மீண்டும் சேருநுவர பொலிஸாரும் ஊர் மக்களும் இணைந்து நேற்று சேருநுவர காட்டுப் பகுதியில் தேடுதல் நடத்திய போது அவர் விறகு எடுப்பதற்காகச் சென்ற துவிச்சக்கர வண்டி கண்டெடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மீண்டும் தேடுதல் மேற்கொண்ட போது துவிச்சக்கர வண்டி கண்டெடுக்கப்பட்ட இடத்திலிருந்து சுமார் 10 மீற்றர் தூரத்தில் சடலம் மீட்கப்பட்டுள்ளது. (உ)

# பெற்றோல் விலையை அதிகரிக்க நடவடிக்கை



ஒக்ரோபர் மாதத்தில் எரிபொருள் விலையை அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாக லங்கா - இந்திய எரிபொருள் நிறுவனம் அறிவித்துள்ளது.

பெற்றோல் மற்றும் டீசல் விலைகளை அதிகரிப்பது தொடர்பாக இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

எனினும் வரிகளை, அரசாங்கம் குறைக்காவிடின், ஒக்ரோபர் முதல் வாரத்துள் பெற்றோல் மற்றும் டீசலின் விலைகளை, அதிகரிப்போம் என்று லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் அறிவித்துள்ளது. விலை அதிகரிப்புத் தொடர்பில் ஒரு சில நாட்களில் கூடித் தீர்மானிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)




# சமாதான ஊர்வலம்

உலக சமாதான தினத்தை அனுஷ்டிக்கும் முகமாகத் தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்டச் சர்வமதப் பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்ட சமாதான ஊர்வலம், இன்று இடம்பெற்றது.

சமாதானத்தின் அவசியம் உணரப்பட்டுள்ள சமகாலத்தில் அதனைச் செயலுருப் பெறச் செய்ய வேண்டும் என்பதற்காகவும் முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதை வலியுறுத்தியும், இந்தச் சமாதான ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்ததாக பேரவையின் இணைப்பாளர் இராசையா மனோகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, திருமலை வீதி தாண்டவன்வெளி காணிக்கை மாதா தேவாலய முன்றலில் இருந்து காலை 8.30 மணிக்கு ஆரம்பமான இந்த ஊர்வலம், மட்டக்களப்பு காந்திப் பூங்காவைச் சென்றடைந்தது. (உ)

# இன்றைய உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் பிரான்ஸ் தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் வட மாகாண ரீதியிலான உதைபந்தாட்டத் தொடர் இன்று காலை 8 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கு மற்றும் அரியாலை பயிற்சி மைதானம் என்பவற்றில் ஆரம்பமாகியது. இந்தப் போட்டிகள் நாளையும் நடைபெறும்.

### நசரேத், லக்கி ஸ்ராரை வென்றது பாடுமீன்

இன்று காலை துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற புங்குடுதீவு நசரேத் மற்றும் பாடுமீன் அணிகள் மோதிய போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. பின்னர் நடைபெற்ற 'பனால்டி' உதையில் 2:1 என்ற கோல் கணக்கில் பாடுமீன் வெற்றி பெற்றது.

மற்றொரு போட்டியிலும் பாடுமீன், 3:0 என்ற கோல் கணக்கில் கிளிநொச்சி லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை வென்றது.

### ஞானமுருகனுக்கு அடித்தது அதிஷ்டம்

யங் ஹென்றிஸ், ஞானமுருகனுக்கிடையிலான போட்டி கோல் எதுவும் பெறாமல் சமநிலையில் முடிவுற்றதால் 'பனால்டி' உதை வழங்கப்பட்டது. 'பனால்டி' உதையும் 4:4 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவுற்றதால், போட்டி விதியின்படி நாணயச் சுழற்சியில் ஞானமுருகன் வெற்றி பெற்றது.

### சென். அன்ரனிஸை வீழ்த்தியது கலைமதி

அரியாலையில் நடைபெற்ற போட்டி ஒன்றில், நவிண்டில் கலைமதியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனீஸ் மோதியது ஆட்டம் சமநிலையில் முடிந்தமையால், 'பனால்டி' உதையில் 3:2 கோல்கணக்கில் நவிண்டில் கலைமதி வெற்றிபெற்றுள்ளது.

தொடர்ந்து போட்டிகள் நடைபெற்று வருகின்றன. (ஐ)

# இந்தியர் கைது



இந்தியப் பிரஜையான 21 வயதுடைய இளைஞன், 435.39 கிராம் தங்கத்தைக் கடத்துவதற்கு, முயன்றபோது, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், சுங்கப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர், தன்னுடைய பயணப்பொதியில் உள்ள இரும்பு கைப்பிடிக்குள் வைத்தே, தங்கத்தை கடத்துவதற்கு, முயன்றுள்ளார் என்று சுங்கப் பிரிவினர் அறிவித்தனர். (உ)

# பொய்ப் பிரசாரம் செய்தால் சட்ட நடவடிக்கை எடுப்போம்



மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரி தொடர்பில் பொய்ப் பிரசாரம் மேற்கொண்டு வருகின்ற சிங்கலே அமைப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மட்டக்களப்புப் பல்கலைக்கழக கல்லூரியின் தலைவரும், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள விஷேட ஊடக அறிக்கையில்,

“இலங்கையில் போக்குவரத்துச் சேவையினை வழங்கி வரும் தனியார் நிறுவனம் ஒன்று மட்டக்களப்புப் பல்கலைக்கழக கல்லூரிக்கு பெரும் தொகைப் பணத்தை அன்பளிப்புச் செய்துள்ளதாகப் பொய்யான தகவலொன்று பரப்பப்பட்டு வருகின்றது. சிங்கலே என்கின்ற அமைப்பின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் இது தொடர்பான திரிவுபடுத்தப்பட்ட செய்திகள், படங்களை வெளியிட்டுள்ளது. குறித்த போக்குவரத்து நிறுவனத்துக்கும் - மட்டக்களப்புப் பல்கலைக் கழகக் கல்லூரிக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது. அவ்வாறு எந்த நிதி உதவிகளும் வழங்கப்படவுமில்லை. சிங்கலே அமைப்பினால் திட்டமிட்ட ரீதியில் இவ்வாறான பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு பெரும்பான்மை மக்களைக் குழப்ப முற்படுகின்றது” என்றும் அவர் தெரிவித்தார்.


# தில்லையடியில் விபத்து ஒருவர் பலி

புத்தளம் - சிலாபம் வீதியின் தில்லையடிப் பிரதேசத்தில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் தில்லையடிப் பகுதியைச் சேர்ந்த முஹம்மது சுல்தான் சஹாப்தீன் (வயது-55) என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து புத்தளம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறியொன்று, புத்தளம், தில்லையடி பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த குறித்த நபர் மீது மோதியதில், இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். இந்த விபத்தில் படுகாயமடைந்த குறித்த நபர், உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டபோதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். (உ)

# இளைஞர்களைத் தாக்கிய பொலிஸார் பதவி நீக்கம்



மிஹிந்தலைப் பிரதேசத்தில் இரு இளைஞர்கள் மீது கொடூரத் தாக்கதல் மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அனுராதபுரம் குற்ற விசாரணைப் பொலிஸ் பிரிவின் அதிகாரிகள் இருவரே இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.


திருட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் மீது பொலிஸ் அதிகாரி மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான இளைஞர்கள் இருவரும் அனுராதபுரம் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி திலின ஹேவாபத்திரனவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த 19 மற்றும் 20ஆம் திகதிகளில் அனுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது.

அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் குறித்த பொலிஸ் அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (உ)

# முல்லையில் பசில்



முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச நேற்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்களை சந்தித்தார். நேற்று மாலை முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தில் முல்லைத்தீவு மாவட்ட லங்கா பொதுஜன முன்னணிக் கட்சி ஆதரவாளர்களால் வரவேற்பளிக்கப்பட்டது.

முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாட்டில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தொடர்ந்து மக்கள் சந்திப்பிலும் ஈடுபட்டார். (உ)

# சிலம்பு சுற்றிய வைகோ



சுவிட்சர்லாந்து நாட்டில் ஜெனிவா நகரில் அமைந்துள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் தலைமையகத்தில், மனித உரிமை ஆணையத்தின் 36ஆவது அமர்வு செப்ரெம்பர் 11 ஆம் திகதி தொடங்கி 29ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இந்த அமர்வில் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ கலந்து கொண்டார். அப்போது ஈழத் தமிழர்களின் உரிமையைப் பற்றித் தொடர்ந்து பேசினார். இதனால் சில சிங்களர்கள் அவரைத் தாக்கவும் முயன்றனர். இதையடுத்து அவருக்கு ஐ.நா. சார்பில் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜெனிவா நகர வீதிகளில் கூடாரம் அமைத்து இலங்கைப் படுகொலை பற்றிய புகைப்படங்களை பகலில் கண்காட்சியாக வைத்து, இரவில் அவற்றை அகற்றி வருகிறார். இந்த நிலையில் நேற்றுப் பகலில் கூடாரம் அமைக்கும் போது அங்கிருந்த ஒரு குச்சியை எடுத்து சிலம்பம் சுற்றினார். இந்த வீடியோ தற்போது சமூக வலைத் தளங்களில் வைரலாகி வருகின்றது.

# அமெரிக்காவை எதிர்க்க வடகொரியா தயார்

அமெரிக்க இராணுவத்தை எதிர்கொள்ள 5 மில்லியன் வடகொரிய இராணுவத்தினர் தயார் நிலையில் இருப்பதாக அந்த நாடு அறிவித்துள்ளது. டிரம்ப் அரசின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் பொருட்டு வடகொரிய இராணுவத்தில் இணைந்து போராட 4.7 மில்லியன் மாணவர்கள் உள்ளிட்ட இளைஞர் மற்றும் பணியாளர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளதாக வடகொரியா அறிவித்துள்ளது.

இதில் 1.22 மில்லியன் பேர் இளம் பெண்கள் எனவும் அந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. மேலும்



வடகொரியாவின் புகழுக்கு களங்கம் விளைவிக்கும் பொருட்டு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் தொடர்ந்து அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும், இதனால் கொதித்தெழுந்த இளம் பெண்கள் மற்றும் இளைஞர்கள் தாமாகவே முன்வந்து தங்களை இராணுவத்தில் இணைத்துக்கொள்ள கோரிப் பதிவு செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வடகொரிய மக்களை உத்வேகப்படுத்தும் நோக்கில் சமீப காலமாக மேற்கத்தேய நாடுகளுக்கு எதிரான பிரசாரம் வடகொரியாவில் அதிகரித்து வருவதாகக் கூறும் ஆய்வாளர்கள், குறிப்பாக வடகொரிய தென்கொரிய யுத்த காலத்தில் அமெரிக்க இராணுவத்தினர் வடகொரிய பெண்களைத் துஷ்பிரயோகம் செய்து சித்திரவதைக்கு உட்படுத்துவது போன்ற புகைப்படங்களையும் வெளியிட்டு வருகின்றனர். அமெரிக்க ஜனாதிபதியை முதுமையினால் மனத்தளர்ச்சியுற்றவர் என கிம் ஜோங் உன் பகிரங்கமாக கிண்டல் பேசியதும், அமெரிக்காவை சாம்பலாக்குவேன் எனவும் ஜப்பானை மூழ்கடிப்பேன் எனவும் மிரட்டல் விடுப்பதும் வடகொரிய மக்களிடம் ஆதரவு பெறுவதற்காகவே எனவும் கூறப்படுகிறது.



# வெடித்தது குண்டு: 7 பேர் சாவு!

சோமாலியா நாட்டின் தலைநகரில் காரில் குண்டு வெடித்ததில் ஏழு பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர். மேலும் பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்திருப்பதாக அந்த நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சோமாலியா தலைநகரான மோகாடிஷூவில் நடந்த தாக்குதல் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்த நகரில் உள்ள பேருந்து நிலையம் அருகே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. குண்டு வெடித்தபோது அந்த இடத்தை ஒரு மினி பேருந்து கடந்து சென்றுள்ளது. அந்தப் பேருந்தில் இருந்தவர்களும் இந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்டனர். இதுவரை ஏழு பேர் உயிரிழந்துள்ள நிலையில், பலர் காயமடைந்துள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகின்றது. கார் பயணித்த போது வெடிக்கச் செய்யப்பட்டதா? அல்லது நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் வெடிக்கச் செய்யப்பட்டதா? என்பது குறித்து எந்தவித தகவலும் இல்லை. தற்சமயம் வரை இந்தத் தாக்குதலுக்கு எவ்வித தீவிரவாத இயக்கமும் பொறுப்பு ஏற்கவில்லை. முன்னதாக இதேபோன்ற தாக்குதலை ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் நடத்திய நிலையில் பெப்ரவரி மாதம் புதிய அரசின் குடியரசுத் தலைவர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையுடன் அரசுக்கு இவர்கள் மிரட்டல் விடுத்ததும் குறிப்பிடத்தக்கது.


# முதலிடத்தில் அமெரிக்கா



தனிநபரின் நிகர சொத்துக்கள் அடிப்படையில் சுவிட்சர்லாந்தைப் பின்னுக்குத் தள்ளி அமெரிக்கா முதலிடம் பிடித்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நிதி சேவைகள் நிறுவனமான அலியான்ஸ் 2016 க்கான உலகின் பணக்கார நாடுகள் குறித்த ஆய்வை நடத்தியது.

இதில் தனிநபர் நிகர சொத்துக்கள் அடிப்படையில் அமெரிக்கா முதலிடம் பிடித்துள்ளது தெரிய வந்துள்ளது. 2015 க்கான பட்டியலில் முதலிடத்தில் இருந்த சுவிட்சர்லாந்து இந்தப் பட்டியலில் இரண்டாமிடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. 2015 விருந்து 2016 இல் அமெரிக்க தனிநபர் நிகர சொத்து 5.8 சதவீதமாக அதிகரித்து 177,210 யூரோவாகவும், சுவிட்சர்லாந்தின் தனிநபர் நிகர சொத்து 2.7 சதவீதமாக அதிகரித்து 175,720 யூரோவாகவும் உள்ளன. பட்டியலில் மூன்றாமிடம் ஜப்பானுக்கு (96,890 யூரோ) கிடைத்துள்ளது.

# கண் சவரம்
## சீனாவில் மருத்துவம்



சீனாவைச் சேர்ந்த அறுபத்திரெண்டு வயதாகும் நபர் ச்கியாங் காவ், இவர் கடந்த நாற்பது ஆண்டுகளாகக் கண்களில் சவரம் செய்து வருகிறார். கூர்மையான கத்தியைப் பட்டை தீட்டி அதில் ஏதோ ஒரு திரவத்தை வைக்கிறார். அதனைக் கொண்டு தன் முன்னால் படுத்திருக்கும் நபரின் கண்களை அகல விரித்துச் சவரம் செய்கிறார்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இப்படிக் கண்களை சவரம் செய்வது மருத்துவமனைகளிலேயே நடைமுறையில் இருந்தது. இதன் மூலமாக ட்ராக்கோமா நோயைக் குணப்படுத்த முடியும் என்று நம்பப்பட்டது. பின்னர், பயன்படுத்தும் கத்தி துருப்பிடித்திருந்தால் அது பார்வையையே பாதிக்கும் என்று எச்சரிக்கப்பட்டதால் இந்த நடைமுறை அப்படியே வழக்கொழிந்து போய்விட்டது. நாற்பது ஆண்டுகளாக பலரும் இவரிடம் கண்களைச் சவரம் செய்திருக்கின்றனர், ஆனால் இதுவரை யாருக்கும் எந்த காயமும் ஏற்பட்டதில்லை என்று தெரிவிக்கின்றனர். அத்துடன் முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே கண் சவரம் செய்கிறார் என்றும், இப்படிச் செய்வதால் கண்களில் அழுக்கு சேராமல் பார்வை துல்லியமாக இருக்கும் என்று தெரிவிக்கின்றார்கள்.

# பேஸ்புக்கில் குருதிக்கொடை

சமூகவலைத்தள ஜாம்பவான் ஆன பேஸ்புக் பல்வேறு சேவைகளைப் பயனர்களுக்கு வழங்கி வருகின்றது. இதில் அடுத்தவர்களுக்கு உதவும் சேவைகளும் உள்ளடங்கும். இவ்வாறான சேவைகளுள் ஒன்றுதான் குருதிக் கொடைச் சேவையாகும். விசேட பேஸ்புக் பதிவின் ஊடாக இரத்தம் தேவைப் படுபவர்களுக்கு இரத்தத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும். அதிலும் இரத்தம் தேவைப்படுபவர் வசிக்கும் இடத்திற்கு அண்மையில் உள்ளவர்களிடமிருந்து இந்தச் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும். நாளை தேசிய குருதிக் கொடைத் தினமாக இந்தியா அறிவித்துள்ளது ஆகையால் இந்தச் சேவை வைரலாகி வருகின்றது. இரத்தம் தேவைப்படுபவர்கள் ஒத்த இரத்தத்தைக் கொண்டவர்களை பேஸ்புக்கின் ஊடாகக் கண்டு பிடித்துத் தொலைபேசி அழைப்பு, வாட்ஸ் ஆப் மற்றும் மெசஞ்சர் ஊடாகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

# பரபரப்பில் 'பிக்பாஸ்'

'பிக்பாஸ்' நிகழ்ச்சி இன்று 100ஆவது நாளை எட்டியுள்ளமையால் பெரும் எதிர்பார்ப்பைக் கிளறி விட்டுள்ளது.

இன்று இரவு 8.30 மணிக்கு ஆரம்பிக்கும் இந்த நிகழ்ச்சி நேரலையாகக் காண்பிக்கப்படும்.

இதில், ஏற்கனவே கலந்துகொண்ட போட்டியாளர்கள் மற்றும் பிரபலங்கள் என அலை மோதவுள்ளனர்.

இந்தப் போட்டியின் வெற்றியாளராக சினேகன், கணேஸ்மற்றும்ஆரவ் ஆகியோரிடையே கடும்போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ)

# உடல் எடை கூட்டும் நாயகர்கள்



ஸ்ரீதேனாண்டாள் பிலிம்ஸ் தயாரிக்க, சுந்தர் சி. இயக்கத்தில், மிகப் பிரமாண்டமாக உருவாகவிருக்கும் 'சங்கமித்ரா' படத்தில் ஜெயம் ரவி, ஆர்யா இருவரும் கதாநாயகர்களாக நடிக்கிறார்கள்.

படத்துக்காக இருவருமே தங்கள் உடல் எடையைக் கூட்டி வருகிறார்கள்.

படத்தில் 2 கதாநாயகர்கள் இருந்தாலும், கதாநாயகி ஒருவர்தான். முதலில் கதாநாயகியாக நடிக்க இருந்த ஸ்ருதிஹாசன் படத்தில் இருந்து விலகிக் கொண்டதால், அவருக்குப் பதிலாக, தீஷா பதனி என்ற மும்பை அழகி ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். (ஓ)

# பேய் தேடி அலையும் நாயகிகள்



நயன்தாரா தனது 'மார்க்கெட்'டை நிலை நிறுத்திக் கொள்ள 2 வருடங்களுக்கு முன்பே பேய் படத்தில் நடித்தார்.

பின்னர் கதாநாயகியைச் சுற்றி வரும் கதைகளில் நடிக்க ஆரம்பித்தார். இதையடுத்து, இப்போது இளம் கதாநாயகர்களுக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.

அவருடைய கலையுலகப் பயணம் எந்தத் தடங்கலும் இல்லாமல், சுமுகமாகப் போய்க் கொண்டிருப்பதால், மற்றக் கதாநாயகிகளும் அவரைப் பின்பற்றத் தொடங்கியிருக்கிறார்கள். குறிப்பாக தமன்னா, காஜல் அகர்வால் ஆகியோர் தங்களைத் தேடி வரும் தயாரிப்பாளர்களிடம், "பேயக் கதை இருக்கிறதா?" என்று விசாரிக்கிறார்களாம்! (ஓ)

# டீச்சரை ஜோடியாக்கிய தனுஷ்!



தனுஷ் நடிப்பில் உருவாக இருக்கும் 'மாரி 2' படத்தில், தமிழ், மலையாள இரசிகர்களைக் கவர்ந்த பிரபல மலர் டீச்சர் ஜோடியாக நடிக்க இருக்கிறார்.

தனுஷ் நடிப்பில் கடந்த 2015ஆம் ஆண்டு வெளியாகி வரவேற்பைப் பெற்ற படம் 'மாரி'. பாலாஜி மோகன் இயக்கிய இந்தப்படத்தில் தனுஸுக்கு ஜோடியாக காஜல் அகர்வால் நடித்திருந்தார். அனிருத் இசையமைத்திருந்தார். இந்தப் படத்தின் இரண்டாவது பாகம் விரைவில் உருவாக இருக்கிறது.

தமிழ், தெலுங்கு என இரு மொழிகளில் தயாராகும் இந்தப் படத்தைத் தனுஷே தயாரிக்கவிருக்கிறார். இதில் தனுஸுக்கு ஜோடியாக யார் நடிப்பார் என்று அனைவரும் எதிர்பார்த்த நிலையில், சாய் பல்லவியைப் படக்குழுவினர் தெரிவு செய்திருக்கிறார்கள்.

மலையாளத்தில் வெளியான 'பிரேமம்' படம் மூலம் ரசிகர்களைக் கவர்ந்தவர் சாய் பல்லவி. இதில் இடம்பெற்ற மலர் டீச்சர் கதாபாத்திரம் சாய் பல்லவிக்கு நல்ல பெயரை பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)



# 4:0

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட்கள், ஒரு இருபது-20 மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

இதில், ஏற்கனவே, டெஸ்டில் 2:1 என்ற கணக்கில் இங்கிலாந்தும், இருபது-20இல் மேற்கிந்தியத் தீவுகளும் வெற்றி பெற்றன.

பின்னர் நடைபெற்ற ஒரு நாள் தொடரில், ஏற்கனவே நடைபெற்று முடிந்த 4 போட்டிகளில்(இரண்டாவது போட்டி கால நிலை சீரின்மையால் நடைபெறவில்லை) 3-0 என்ற கணக்கில் இங்கிலாந்து ஏற்கெனவே தொடரைக் கைப்பற்றிவிட்டது.

இந்தநிலையில், நேற்று ஐந்தாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நடைபெற்றது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 288 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் வெற்றியிலக்கைத் துரத்திய இங்கிலாந்து பேர்ஸ்டோ (141), ரோய் (96), ரூட் (46) ஆகியோரின் உதவியுடன், 38 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் பறிகொடுத்து, 294 ஓட்டங்களைச் சேர்த்து வெற்றியைத் தனதாக்கி, 4:0 என்ற கணக்கில் தொடரையும் தன் வசப்படுத்தியது.

இங்கிலாந்து அணியின் ஜோனி பேர்ஸ்டோ ஆட்ட நாயகனாகவும், மொயின் அலி தொடர்நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

# 'வடமாகாண மகுடம்' சூடியது றேஞ்சர்ஸ்



கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகம் நடத்திவந்த 'வட மாகாண மகுடம்' உதைபந்தாட்டத் தொடரின் சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக்கொண்டது கொற்றாவத்தை றேஞ்சர்ஸ்.

நேற்று நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சம்பியன்பற்று சென். பிலிப் நேரிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆரம்பம் முதல் சிறப்பாக ஆடிய இரு அணிகளும் கோல்களைப் போடுவதற்குப் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தின.

ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் றேஞ்சஸ்வீரரான சிவறோயன் முதலாவது கோலைப் போட, தொடர்ந்து 18ஆவது நிமிடத்தில் நஜித்தும், 35ஆவது நிமிடத்தில் சுஜாஸ்கானும் அடுத்தடுத்து கோல்களைப் போட்டனர்.

இறுதியில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சக்திவேல் விளையாட்டுக் கழகத்தின் 'வடமாகாண மகுடம்' வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

ஆட்ட நாயகனான ப.சுஜாஸ்கான், தொடர் ஆட்ட நாயகனாக சி.சிவறோயன், சிறந்த பின்கள வீரராக சி.மாதுஜன், சிறந்த வளர்ந்து வரும் வீரராக வ.ரவிவர்மன், சிறந்த கோல் காப்பாளராக கெ.கீர்த்தனன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

# மணற்காடு சென். அன்ரனிஸ் தொடர்: சரஸ்வதி, கலைமதி வெற்றி





மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில், நேற்றைய ஆட்டங்களில், சரஸ்வதி மற்றும் கலைமதி விளையாட்டுக் கழகங்கள் வெற்றி பெற்றன.

சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் உதைபந்தாட்டத் தொடரை நடத்தி வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வறணி யூத் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில், உரும்பிராய் சரஸ்வதி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

உரும்பிராய் சரஸ்வதி சார்பாக கஜீதீபன் 6 கோல்களையும், லயன்சன் ஒரு கோலையும் போட்டனர். ஆட்ட நாயகனாக கஜீதீபன் தெரிவு செய்யப்பட்டார்.


பின்னர்நடைபெற்ற இரண்டாவது போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளான் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில், கலைமதி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. கலைமதி சார்பாக வானுப்பிரியன் 2 கோல்களையும், றஜீபன் ஒரு கோலையும் போட்டனர். வானுப்பிரியன் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். (ஐ)



# தொழிநுட்பப் பீடம் திறப்பு

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் தொழிநுட்பப் பீடத்தை நேற்று கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் திறந்து வைத்துள்ளார். தேசிய பாடசாலையான கிளிநொச்சி மத்திய மாகா வித்தியாலயத்தில் மத்திய கல்வி அமைச்சின்நிதி ஒதுக்கீட்டில்அமைக்கப்பட்ட தொழிநுட்பப் பீடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சருடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் பாடசாலை அதிபர் இரவீந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (உ)

# இன்றைய கருத்தோவியம்




# அகதிகள் மீது தாக்குதல் பெண் கைது

மியான்மார் ரோஹியங்க அகதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த, கல்கிஸை யில் உள்ள வீட்டின் மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கொழும்பு குற்றப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மியான்மர் ரோஹியங் அகதிகள் தடுத்துவைக்கப்பட்டிருந்த கல்கிஸை பிரதேசத்தில் உள்ள நிலையத்துக்கு முன்பாக, பௌத்த தேரர்கள் சிலர் மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அடுத்து, அகதிகள்30 பேரும் கல்கிஸை பொலிஸாரின் பொறுப்பின் கீழ், கடந்த 26 ஆம் திகதி கொண்டு வரப்பட்டனர். அதன் பின்னர் அவர்கள் அனைவரும் பூசா முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதே வேளை, இந்த வீட்டின் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சந்தேக நபர், நேற்றிரவு கைதுசெய்யப்பட்டுள்ளார். (உ)

# சிறார் மீது வன்முறை இலங்கையில் அதிகரிப்பு

நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சிறுவர்களுக்குப் பாதுகாப்பான உலக மொன்றை உருவாக்கி கொடுத்தல் நம் அனைவரதும் கடமையாகும் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி மரினி த லிவேரா தெரிவித்துள்ளார். இது தொடர்பாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், "தாய்தந்தையர்களின் வயது வந்தவர்களின் பாசத்தைத் தக்கவைப்போம்! அழகியதொரு உலகுக்குச் சிறார்களை அழைப்போம்' என்பது உலக சிறுவர் தினத்தின் இந்த வருடத்துக்கான தொனிப் பொருளாகும். சிறுவர்களின் மீது சமூகத்தின் கவனம் அதிகமாக செலுத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்திலேயே இம்முறை நாம் உலக சிறுவர் தினத்தைக் கொண்டாடுகின்றோம். தற்போது சிறுவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் வன்முறைக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களை கேட்கக்கூடியதாக உள்ளது. இந்த நிலை மிகவும் மனவருத்தத்துக்குரியதாகும். இந்த நிலையை மாற்றியமைப்பதற்கு சமூக ரீதியிலான மாற்றமொன்று அவசியமாக விருக்கின்றது." - குறிப் (உ)


# மூவருக்கு மரண தண்டனை

2006 ஆம் ஆண்டு ஒருவரைப் படுகொலை செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த மூவரைக் குற்றவாளிகளாக, இனங்கண்ட, பாணந்துறை மேல் நீதிமன்றம், அவர்கள் மூவருக்கும் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. பாணந்துறை மாபெல்ல பிரதேசத்தில் தேவகே பியந்த என்பவரைக் கத்தியால் குத்தி செய்துவிட்டு, மற்றொருவரை கத்தியால் வெட்டிக் காயப்படுத்தினர் என்று குற்றம்சாட்டியே இந்த மூவருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மூவருக்கு எதிராக வழக்கு, பாணந்துறை மேல் நீதிமன்றத்தில், நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, நீதிபதி மேற்கண்டவாறு தண்டனை விதித்துள்ளார். குற்றவாளிகளான, பாணந்துறை அலுபோமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த சுராஜ் பியந்த (வயது -45), நிலந்த சமிந்த பெரேரா (வயது -45) மற்றும் மனோஜ் நிஷாந்த (வயது -48) ஆகியோருக்கே இவ்வாறு மரண தண்டனைத் தீர்ப் பளிக்கப்பட்டுள்ளது. (உ)

# கூரைகளில் சூரிய மின்கலம் நடைமுறைப்படுத்த ஆலோசனை

கட்டடக் கூரைகளின் மேல் சூரிய சக்தி மூலமான மின்னைப்பிறப்பாக்க அபிவிருத்தி மீதான பொதுமக்கள்ஆலோசனையை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு ஆரம்பித்துள்ளது. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது , கூரைகளின் மேல் சூரியப் படலங்களை வைத்து மின் பிறப்பாக்கம் நடைபெறுவதை நடைமுறைப்படுத்துவதற்கான அரசாங்கக் கொள்கைக்கு இந்த ஆலோசனைப் பெறுகையானது உதவி செய்யும். அடுத்த பத்து ஆண்டுகளில் இவ்வாறான சூரிய மின் பிறப்பாக்கங்கள் ஒரு மில்லியன் அளவில் செயற்பட வேண்டும் என இலங்கை அரசாங்கம் இலக்கு வைத்துச் செயற்படுகின்றது. இந்தத் திட்டம் 2020ஆம் ஆண்டில்200 ஆறு கொள்ளளவை அடைய இலக்கிட்டுள்ள தோடு 2025ஆம் ஆண்டில் அதனை 1000 ஆக அதிகரிக்கவும் திட்டமிட்டுள்ளது.

# பாடசாலை மாணவர்களுக்கு ஸ்மாட் கிளாஸ் வகுப்பறைகள்




ஸ்மாட் கிளாஸ் என்று அழைக்கப்படும் இலங்கையின் முதலாவது திறன் விருத்தி வகுப்பறை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மகாவித்தியாலயத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த திறன் வகுப்பறையை பார்வையிட்டார். 21 ஆம் நூற்றாண்டுக்கு பொருத்தமான கல்வியை அரசாங்கம் நடைமுறைப் படுத்துகின்றது. இந்த வகுப்பறை பரீட்சார்த்த முயற்சியாகும். இதன் மற்றுமொரு கட்டமாக அடுத்த வருடம் முதல் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு டொப் கணனிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. நாட்டில் உள்ள தேசிய பாடசாலைகளில் ஸ்மாட் வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான யோசனையும் முன்மொழியப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு தரம் 13 வரையிலான கல்வி கட்டாயமாக்கப் படும். இரண்டாம் நிலைக் கல்வியைப் பாடசாலை மட்டத்தில் தொழில் கல்வியாக வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொழிற் பயிற்சி நிறுவனங்களிலும் ஸ்மாட்கிளாஸ் வகுப்புக்களை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. (உ)



# பொருளாதார மத்தியநிலையம் ஜனாதிபதியால் திறக்கப்படவுள்ளது

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 14 ஆம் திகதி கிளிநொச்சிக்குப் பயணம் செய்யவுள்ளார். அதன போது அவர் கிராமிய பொரளாதார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி விசேட பொருளாதார மத்திய நிலையத்தை திறந்துவைக்கவுள்ளார். இந்த நிகழ்விற்கான முன் ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர் கரிசனின் பங்குபற்றுதலுடன் கிளிநாச்சி மாவட்டச்செயலகத்தில் நேற்று இடம் பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள், அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரசாங்க அதிபர் சத்தியசீலன், முப்பகைள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (உ)

## நாளை நாளும் கோளும்

01.10.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 15 ஆம் நாள்

ஏகாதசி பி.இ. 01.05 வரை | திருகோணம் மு.இ. 07.28 வரை | அமிர்தயோகம் | ஏகாதசி விரதம்

இராகுகாலம் 04.32 - 06.02 | சுபநேரம் 09.02 - 10.32 | எமகண்டம் 12.02 - 01.32

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆதாயம் | அனுகூலம் | வரவு | வெற்றி | சிரமம் | இலாபம் | நலம் | இரக்கம் | சுகம் | அமைதி | உதவி | பயம் |

எதிரொலி
Ethiroli


## கலையரங்கு திறப்பு விழா





கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் கலையரங்கு திறப்பு விழா நிகழ்வு இன்று நடைபெற்றது. குறித்த கலையரங்கு நெல்லியடி பிரபல தொழிலதிபர் வல்லிபுரம் சிவசூரியகுமரனின் (தவராசா) ஞாபகார்த்தமாக அவரு டைய மகன் தயாபரனினால் அமைக்கப்பட்டுள்ளது. கலையரங்கு அமைப்பதற்கு 40 லட்சம் ரூபா நிதி செல விடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-11)

## அந்த நாள் ஞாபகம்.....!



**1882.09.29**

உலகின் முதலாவது நீர்மின் திறன் ஐக்கிய அமெ ரிக்காவின் விஸ்கொன்சின் மாநிலத்தில் அமைக்கப் பட்டது.

## "வைகோ" தாக்குதல் முயற்சிக்கு தமிழக முதல்வர் கண்டனம்

ஜெனிவாவில் வைகோவை சிங்களவர்கள் சிலர் தாக்க முற்பட்ட செய்தி அதிர்ச் சியையும் வருத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தமி ழக முதல்வர் எடப்பாடிப் பழனிச்சாமி கூறியுள்ளார். ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் 36ஆவது அமர்வு, ஜெனிவாவில் கடந்த 11ஆம் திகதி முதல், வரும் 29 ஆம் திகதி வரை நடைபெற்றது. இதில் பங்கேற்பதற்காக வைகோ ஜெனிவா சென்றிருந்தார். ஜெனிவா மனித உரிமை கள் கவுன்சிலின் பிரதான அரங்கத்தில் வைகோ இரண்டு முறை பேசினார். பேசிவிட்டு வந்த வைகோவை சிங்களவர்கள் பலர் சூழ்ந்து கொண்டார் கள். அதில் ஒரு பெண் மணி, நீ இலங்கைப் பிரஜை இல்லையே? நீ இலங்கையைப் பற்றி எப் படிப் பேசலாம்? என்று கேட்டார். இந்தச் சம்பவத் துக்கு தமிழக அரசியல் கட்சித்தலைவர்கள் பல ரும் கண்டனம் தெரிவித்தி ருந்தனர். இந்த நிலையில் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியும் கண்ட னம் தெரிவித்துள்ளார். வருங்காலத்தில் இதுபோன்ற விரும்பத்தகாத செயல்கள் நடக்காமலிருக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ)

## நூல் வெளியீடு



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நவராத்திரி விழா வும் நவமலர் நூல் வெளியீடும் இன்று நடைபெற்றது.

## முன்பள்ளி சிறுவர் தினம்

ஆத்தியடி சைவ மன்ற முன் பள்ளிச் சிறுவர் தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு ஆத்தியடி சைவ மன்ற முன்பள் ளியிலே நடைபெற வுள்ளது.ஓய்வுபெற்ற அதிபர் த.சந்திரசேகரம் தலைமை ஏற்று நடத்த வுள்ளார்.

## பூசா சிறைச்சாலை முன் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை

பூசா தடுப்பு முகாமுக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப் பாட்டம் நடத்துவதற்குக் காலி நீதவான் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. இது தொடர்பில் பொலிஸ் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், பூசா தடுப்பு முகாமுக்கு முன் பாக எதிர்ப்பு ஆர்ப்பாட் டம் நடத்துபவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அண்மையில் கல்கிசையில் விடுதி ஒன்றில் தங்கவைக் கப்பட்டிருந்த மியான்மர் முஸ்லீம்களை அங்கிருந்து வெளியேற்றுமாறு கோரி பௌத்த அமைப்புக்கள் சிலவற்றினால் ஆர்ப்பாட் டம் மேற்கொள்ளப்பட் டது. இதனையடுத்து அங்கிருந்த மக்கள் பூசா முகாமிற்கு மாற்றப்பட் டனர். இந்த நிலையிலேயே பூசா தடுப்பு முகாம் பகுதி யில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ள தடை விதிக் கப்பட்டுள்ளது. (உ)

## வைர விழாவும் பரிசளிப்பு விழாவும்

கிளி.இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த வைர விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் மாலை 4 மணியளவிலே வித்தியா லய மைதானத்தில் நடை பெறவுள்ளது. இதனை வித் தியாலய முதல்வர் ம.கிறிஸ்ரி லெனாட் மனுவல் தலைமை ஏற்று நடத்த வுள்ளார்.

## லண்டனில் தமிழரொருவர் 107 மில்லியன் மோசடி

பணத் தூய்மையாக்கலில் ஈடுபட்ட கும்பலின் தலை வரான தமிழர் ஒருவரின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகப் பிரித்தானிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. லண்டன் பண பரிவர்த் தனை மூலம் 107 மில்லி யன் பவுண்ட்கள் பணத் தூய்மையாக்கல் செய்த கும்பலின் தலைவரின் சொத்துக்களே பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. வருவாய் மற்றும் சுங்க வரி விசாரணைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய 45 வயதுடைய இராமநாதன் தயாபரன் என்பவர் சிறை யில் அடைக்கப்பட்டார். கடந்த 2014 ஆண்டு மே மாதம் ராமநாதன் தயா பரன் என்பவருக்கு 9 ஆண் டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன் தினம் அவ ரது சொத்துக்களை பறிப் பதாக நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.இந்த கும்பல் ஒரு தொகை மோசடி பணத்தை லண்டன் பண பரிவர்த்தனை ஊடாக இலகுவாக 500 பவுண்ட் நாணயங்களுக்கு மாற்றி யுள்ளதாக விசாரணை பிரிவு கண்டுபிடித்துள் ளது. இந்த மோசடிக் கும்பலின் தலைமை அதி காரியாக தயாபரன் செயற் பட்டுள்ளார் எனத் தெரிய வந்துள்ளது. (உ)

## விபத்துக்களில் எட்டுப் பேர் காயம்

திருகோணமலை மாவட்டத்தில் மூன்று பொலிஸ் நிலையங்களில் இடம்பெற்ற வெவ்வேறு விபத்துகளில் எட்டு பேர் படுகாயமடைந்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டி ருந்த வேளை வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகியதில், தந்தை-தாய் மற்றும் பிள்ளை ஆகிய மூவரும் காயமடைந்த நிலையில் மஹதிவுல்வெவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக் காகத்திருகோணமலை பொதுவைத்திய சாலைக்கு இடமாற்றப்பட்டனர். இதேவேளை, புல்மோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜின்னாநகர் பகுதி யில் மோட்டார் சைக்கிளுடன் துவிச் சக்கர வண்டி மோதியதில் இருவரும் காயமடைந்த நிலையில் அநுராத புரம் போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப் பட்டுள்ளனர். அத்துடன், துறைமுக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தபால் கந்தோர் பகுதியில் மோட்டார் சைக் கிள் இரண்டும் நேருக்கு நேர் மோதி யதில் இருவர் படுகாயமடைந்தனர். மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த வயோதிபருடன் வேகமாக சென்ற பிறிதொரு மோட் டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதுடன், அந்த மோதிய மோட்டார் சைக்கிள் சாரதியை கைதுசெய்துள்ளதாக மொறவெவ பொலிஸார் தெரிவித்தனர். (உ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வடக்கில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகளை ஒழுங்கமைத்தனர் .

பசில் தலைமையில் ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணி என்ற புதிய கட்சி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறிய பலரும், மகிந்த தரப்பு அணியைச் சேர்ந்தவர்களும், ஏனைய சில கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் உள்வாங்கி அமைக்கப்பட்ட இந்தக் கட்சி சார்பிலேயே மகிந்த ராஜபக்சவின் எதிர்கால அரசி யல் நடவடிக்கைகள் அமையவுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்த நிலையில் தமது கட்சியின் அரசியல் நடவடிக்கை களை வடக்கிலும் பரவலாக்க பசில் முடிவெடுத்துள்ளார். இதன் ஓர் அங்கமாக அவர் யாழ்ப்பாணத்துக்கு இன்று வந்து சில சந்திப்புக்களை நடத்தியதோடு, காலையில் கோப்பாயிலும், மாலையில் யாழ்ப்பாணம் நீராவியடியி லும் நடைபெற்ற கூட்டங்களிலும் பங்கேற்றார். இதன் போது, பசிலுக்கு பின்னால் ஈ.பி.டி.பி கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்களான கமல், மற்றும் தற்போது அந்த அமைப்பில் இயங்கும் ரஜீவ் ஆகியோரும் அவர்களின் சகாக்களுமே அதிகளவில் கலந்து கொண்டுள்ளனர். நல்லூர் ஆலயத்தை பசில் தரிசிக்க வந்ததில் இருந்து மாலையில் கூட்டத்துக்கு பசில் செல்லும் வரையில் இந்தக் குழுவினரே அவருக்குப் பின்னால் விலகாது நிழலாகப் பின் தொடர்ந்தனர். பசிலின் கட்சியில் கமல், ரஜீவ் ஆகியோருக்கு முக்கிய பொறுப்புகள் வழங்கப்பட இருப்பதாகவும், அதனாலேயே அவர்கள் பசிலோடு ஒட்டிக் கொண்டு திரிந்ததாகவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

" நீண்ட காலமாக தமிழ் மக்களைத் துன்பத்தில் மூழ்க வைத்த போரை முடிவுக்கு கொண்டு வந்தவர் மகிந்த ராஜபக்ச. போருக்குப் பின்னர் வடக்கில் அபிவிருத்திகளை மேற்கொண்டவரும் மகிந்த ராஜபக்சவே தான். அதுமட்டுமல்லாது, இந்த வடமாகாண சபையை உருவாக்கியவரும் அவரே. ஆகவே வடக்கில் தமிழ் மக்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி அவற்றைத் தீர்ப்பதற்கு, ஸ்ரீ லங்கா பொது ஜன முன்னணி தயாராகவுள்ளது. அதற்காக எமது கட்சியை வடக்கில் பலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவுள் ளன" என்று நல்லூர் முருகன் ஆலயத்தை தரிசித்த பின் னர் ஊடகவியலாளர்களிடம் பசில் ராஜபக்ச தெரிவித் தார்.( அ- 09)

**ஹர்த்தால்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தண்டிக்கப்பட வேண்டும் எனக் கோரியே ஹர்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும் அலுவலகங் கள் அரச தனியார் பஸ் சேவைகள் வழமை போன்று இடம்பெற்றதோடு யாழ்.நகரில் வர்த்த நிலையங்களும் வழமைபோல இயங்கின. இதேவேளை வித்யாவுக்கு முழுமையான நீதி வேண்டும் என்ற குறித்த ஹர்த்தால் அழைப்பை வரவேற்பதாக ஈ.பி.டி.பி மகளிர் அணி எனும் பெயரில் அறிக்கை ஒன்று வெளியாகியிருந் தமையும் குறிப்பிடத்தக்கது. (எ)

**65 பொலிஸா...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை கைதுசெய்த சம்பவம் தொடர்பில் அறிக்கையிடப் பட்ட புத்தகம், காணாமல் போயுள்ள சம்பவத்தை அடிப்படையாக வைத்தே, இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று அறியமுடிகின்றது. 3 கிராம் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப் பட்ட சம்பவம் தொடர்பிலான அறிக்கையே காணாமல் போயுள்ளது. (எ)

## வாக்காளர் பெயர்ப் பட்டியல் ஒக்ரோபரில் இறுதி செய்யப்படும்

2017 திருத்தப்பட்ட வாக் காளர் பெயர்ப் பட்டியல் அடுத்த மாதம் 12ஆம் திகதி இறுதி செய்யப் படும் என்று தேர்தல்கள் செயலகத்தின் மேலதிக தேர்தல் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரி வித்தார். இந்தப் பெயர்ப் பட்டியல் இந்த வாரம் உறுதிப்படுத்தப்பட இருந் தது. எனினும், மாவட்ட மட்டத்தில் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் மூலம் இது உறுதிப்படுத்தப்பட வேண்டி இருப்பதனால், சற்றுக் காலதாமதமானது என்று குறிப்பிட்டார். எதிர்காலத்தில் இடம் பெறும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களுக்கு 2017 புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் பயன்படுத்தப் படும் என்று மொஹமட் மேலும் தெரிவித்தார். எதிர்வரும் ஜனவரி மாத இறுதிக்குள் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர் தலை நடத்துவற்கான நட வடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-09)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 30.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.